**ஜூலை –01**

# TNPSC துளிகள்

- ஆப்கானிஸ்தானில் உருவாகும் போதைப் பொருட்களை கடத்துவதன் மூலம் பெறப்படும் சட்ட விரோதமான நிதிகளின் பரிமாற்றங்கள் குறித்த பாரீஸ் ஒப்பந்த முன்முயற்சி மீதான நிபுணர்கள் பணிக் குழுவின் 2 நாள் கூட்டம் புதுடெல்லியில் நடத்தப்பட்டது.
- சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் 134வது அமர்வில் இத்தாலியின் மிலன் - கார்டினா ஆம்பெஸோ பகுதியானது 2026 ஆம் ஆண்டின் குளிர்கால ஒலிம்பிக் போட்டியை நடத்தும் உரிமையை வென்றுள்ளது.
    - இது 1956 ஆம் ஆண்டு ஸ்கி ரெஸாட் சோர்ஷினா மற்றும் 2006ல் துரின் ஆகியவற்றிற்குப் பிறகு இத்தாலியில் நடைபெறும் 3வது பதிப்பாகும்.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாட்டின் புதிய DGP

- தமிழ்நாட்டின் காவல்துறையின் பொது இயக்குநர்/காவல் துறையின் தலைவராக ஜலத் K. திரிபாதி பொறுப்பேற்றுள்ளார்.
- இவர் 1985 ஆம் ஆண்டின் இந்திய காவல் பணி அதிகாரியாவார்.
- இவர் T.K. இராஜேந்திரனுக்கு அடுத்ததாக இப்பதவியினை ஏற்றுள்ளார்.



### *இவர் பெற்ற விருதுகள்*

- ரோந்து காவலர் திட்டம், குடிசைப் பகுதி தத்தெடுப்புத் திட்டம் மற்றும் புகார் பெட்டி அமைப்பு முன்முயற்சி ஆகிய திட்டங்களுக்காக "பொது நிர்வாகத்தில் சிறப்பாக பணியாற்றியதற்காக பிரதமரின் விருது".
- வாஷிங்டனின் சர்வதேச காவல்துறை தலைவர்கள் சங்கத்தினால் நிறுவப்பட்ட "சர்வதேச சமூகக் காவலர் விருது".

- கிளாஸ்கோவில் உள்ள பொது நிர்வாகம் மற்றும் மேலாண்மைக்கான காமன்வெல்த் சங்கம் வழங்கிய 'ஆளுமையில் புத்தாக்கத்திற்கான தங்கப் பதக்கம்'.

## புதிய தலைமைச் செயலாளர் – தமிழ்நாடு

- மாநில அரசானது தனது 46வது தலைமைச் செயலாளராக K.சண்முகத்தின் நியமனத்தை அறிவித்து இருக்கின்றது.



- இவர் 1985 ஆம் ஆண்டின் இந்திய ஆட்சிப் பணி அதிகாரியாவார்.
- இவர் கிரிஜா வைத்தியநாதனையடுத்து இப்பதவியை ஏற்றுள்ளார்.

## பாரம்பரிய பூங்கா – தமிழ்நாடு

- சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தாவரங்கள் உட்பட பல்வேறு பூர்வீக மரங்கள் மற்றும் தாவரங்களை வெளிக்காட்டும் சொந்தப் பாரம்பரியத் தோட்டத்தை சென்னை மாநகரமானது பெறவுள்ளது.




- இந்தத் தோட்டமானது சென்னையின் வண்ணாரப் பேட்டையில் அமைக்கப்படவுள்ளது.

- இது தமிழ்நாடு தோட்டக்கலை மேம்பாட்டு நிறுவனத்தால் அமைக்கப்படவுள்ளது.

# தேசியச் செய்திகள்

## அதிக உப்பு மற்றும் சர்க்கரையைக் கொண்ட பொருட்கள் மீது குறியிடுதலுக்கான விதிமுறைகள்

- உணவுப் பொருட்களானது கொழுப்பு, சர்க்கரை மற்றும் உப்பு ஆகியவற்றை அதிக அளவில் கொண்டுள்ளதைக் காட்டும் வகையில் அவற்றின் அடையாளக் குறியீட்டுச் சீட்டில் சிவப்பு நிறக் குறியீடுகளை கட்டாயமாக்க இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர ஆணையம் (Food Safety and Standards Authority of India - FSSAI) முடிவு செய்துள்ளது.
- பல்வேறு வகையான உணவுப் பொருட்களுக்கான சோடியம் மற்றும் கொழுப்புப் பொருட்களின் உள்ளடக்கத்திற்கான எல்லையளவை FSSAI வரையறுத்துள்ளது.
- சர்க்கரையளவைப் பொறுத்தவரை, 100கி/100மிலி பொருளில் வழங்கப்படும் மொத்த ஆற்றலில் (கிலோ கலோரி) 10 சதவீதத்திற்கும் அதிகமாக சர்க்கரை உள்ளடக்க மதிப்பை சேர்க்கும் உணவுப் பொருட்களில் சிவப்பு நிறக் குறியீடு இடுதலை இந்த வரைவு விதிமுறைகளானது முன்மொழிகின்றது.

# சர்வதேசச் செய்திகள்

## G20 மாநாடு

- 14வது G20 மாநாடானது ஜப்பானின் ஒசாகா நகரத்தில் ஜூன் 28 மற்றும் 29 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.
- G20 உறுப்பினர்களில் அமெரிக்காவைத் தவிர ஏனைய 19 உறுப்பினர்களும் பாரீஸ் காலநிலை ஒப்பந்தத்தின் முழு அமலாக்கத்தின் மீதான அவர்களின் நிலைப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தினர். மேலும் பரந்த அளவிலான பசுமைத் தொழில்நுட்பங்கள் மற்றும் அணுகுமுறைகளை நோக்கவும் அவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.
- G20 நாடுகளின் தலைவர்கள் உலகளாவிய அளவிலான முக்கியப் பொருளாதார சவால்களை எதிர்கொள்ள ஒன்றிணைந்த முயற்சிகளை மேற்கொள்வதற்கான "ஒசாகா பிரகடனத்தை" வெளியிட்டனர்.
- இந்த உச்சி மாநாட்டிற்கு முன்னதாக ஜப்பான் - அமெரிக்கா – இந்தியா (JAI / Japan-America - India) ஆகிய நாடுகளுக்கிடையேயான முத்தரப்புப் பேச்சுவார்த்தை ஒசாகாவில் நடைபெற்றது.
- அதேபோல் ரஷ்யா - இந்தியா- சீனாவிற்கு (RIC / Russia – India - China) இடையேயான முத்தரப்புப் பேச்சுவார்த்தையும் நடைபெற்றது.
- ஜப்பானியப் பிரதமரான ஷின்ஸோ அபேவால் அறிவிக்கப்பட்ட "ஒசாகா பாதை" என்ற அறிக்கைக்கு 24 நாடுகள் மற்றும் குழுக்கள் கையொப்பமிட்டன.
- இந்தியா, இந்தோனேசியா, எகிப்து மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகள் இதில் கையொப்பமிடவில்லை.
- "ஒசாகா பாதை" என்பது மேம்படுத்தப்பட்ட பாதுகாப்புகளுடன் எல்லைத் தாண்டிய

தரவு ஒட்டத்தை மேம்படுத்துவதற்கான ஒரு கட்டமைப்பாகும்.

❖ இந்த மாநாடானது கீழ்க்காணும் 8 கருத்துருக்களின் கீழ் நடைபெற்றது.

| | |
|---|---|
| 1. உலகளாவிய பொருளாதாரம் | 5. வேலைவாய்ப்பு |
| 2. வர்த்தகம் மற்றும் முதலீடு | 6. பெண்களுக்கு அதிகாரமளித்தல் |
| 3.புத்தாக்கம் | 7. வளர்ச்சி |
| 4. சுற்றுச்சூழல் மற்றும் ஆற்றல் | 8.சுகாதாரம் |

❖ முதல் G20 மாநாடானது 1999 ஆம் ஆண்டில் ஜெர்மனியின் பெர்லினில் நடைபெற்றது.

❖ G20 மாநாடானது “நிதியியல் சந்தைகள் மற்றும் உலகப் பொருளாதாரம் மீதான மாநாடு” என பொதுவாக அறியப்படுகிற்து.






# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## நாசாவின் டிராகன் ப்ளை விண்கலம்

- நாசாவானது சனிக் கோளின் மிகப்பெரிய நிலவான டைட்டனுக்கு ஆளில்லா விமானத்தையொத்த குவாட்கார்பர் (நான்கு சுழலிகள் உதவியுடன் உந்தப்படும் வானூர்தி) ஒன்றை அனுப்பப் போவதாக அறிவித்துள்ளது.
- இந்த டிராகன் ப்ளை விண்கலம் 2026 ஆம் ஆண்டில் விண்ணில் செலுத்தப்படுவதற்குத் திட்டமிடப் பட்டுள்ளது.
- இது 2034 ஆம் ஆண்டில் டைட்டனைச் சென்றடையும்.

# மாநிலச் செய்திகள்

## கிரிஷ் கியோஸ்க் – ஹரியானா

- ஹரியானா மாநில வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சரான ஓம் பிரகாஷ் கிரிஷி கியோஸ்க் மையத்தை (விவசாயிகள் சேவை) பஞ்சகுலாவில் தொடங்கி வைத்தார்.
- இவை விவசாயிகளுக்கு அரசின் திட்டங்களைப் பற்றியத் தகவல்களை வழங்குவதுடன் பிரதம மந்திரி பசல் பீமா யோஜனாவின் கீழ் கோரிக்கைகளைத் தாக்கல் செய்யவும் உதவும்.
- இவை விவசாயிகளுக்கான சேவைகளை நிகழ்நேர தளத்தில் (ஆன்லைனில்) கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுச் செயல்படும் 'டிஜிட்டல் கிசான் சுவிதா' எனும் மாநில அரசின் திட்டத்தின் கீழ் இயங்கும்.
- விவசாயிகள் பயிர்த் தாளடிகளை எரிக்காமல் அதற்குப் பதிலாக அறிவியல் முறைகளைப் பயன்படுத்தி வயல்களில் அவற்றை விதைக்க ஊக்குவிக்கும் "சுச்சனா ரதம்" எனும் வசதியையும் அவர் கொடியசைத்துத் துவக்கி வைத்தார்.
- மேலும் அமைச்சர் அக்ரி ஸ்கோப் எனும் தலைப்பிலான நூலையும் வெளியிட்டார்.


## பங்களா ஷஷ்யா பீமா - மேற்கு வங்காளம்

- மேற்கு வங்காள அரசானது 2019 ஆண்டின் காரீஃப் பருவத்திற்கான பயிர் காப்பீட்டுத் திட்டத்தை இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனத்துடன் இணைந்து அறிவித்துள்ளது.
- பங்களா ஷஷ்யா பீமா என்றழைக்கப்படும் இந்தத் திட்டமானது 15 மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கும் பொருந்தும்.
- முழு காப்பீட்டுத் தொகையையும் அரசே செலுத்துவதால் இந்த பயிர்க் காப்பீட்டுத் திட்டமானது விவசாயிகளுக்கு முற்றிலும் இலவசமாகும்.
- அமன் நெல், அவுஸ் நெல், சணல் மற்றும் சோளம் ஆகியவை இந்தக் காப்பீட்டின் கீழ் வரும் பயிர்களாகும்.
- நடவு செய்யும் போதும், சாகுபடியின் போதும், அறுவடை செய்த பின்னர் பயிர் வயலில் இருக்கும் போதும், மோசமான வானிலை சூழ்நிலைகளின் போதும் என 4 நிலைகளில் இந்தக் காப்பீடானது அளிக்கப்படும்.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## நினைவிற் கொள்ள வேண்டிய ஒரு பிரதமர்- புத்தக வெளியீடு

- முன்னாள் கடற்படைத் தலைவரான அட்மிரல் சுஷில் குமார் எழுதிய "நினைவிற் கொள்ள வேண்டிய ஒரு பிரதமர்" எனும் புத்தகமானது ஜூன் 28 அன்று வெளியிடப்பட்டது.
- இந்தப் புத்தகமானது 2001 ஆம் ஆண்டில் இந்தியப் பாராளுமன்றத்தில் ஜெய்ஷ்-இ-முகமது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்குப் பிறகு அப்போதையப் பிரதமரான வாஜ்பாய் மற்றும் முப்படைத் தலைவர்களுக்கிடையேயான உறவு குறித்து விளக்குகிறது.




# விளையாட்டுச் செய்திகள்

## பிளாக் பாரஸ்ட் கோப்பை

- இந்தியாவின் இளையோர் பெண் குத்துச் சண்டை வீரர்கள் ஜெர்மனியின் வில்லிங்கென் - ஸ்வென்னிங்கெனில் நடைபெற்ற பிளாக் ஃபாரஸ்ட் கோப்பைப் போட்டியில் ஐந்து தங்கம் உட்பட ஏழு பதக்கங்களை வென்றனர்.
- மேலும் இந்த அணியானது இப்போட்டித் தொடரின் சிறந்த அணியாகவும் தேர்வு செய்யப்பட்டது.
    - ஹரியானாவின் நேஹா (54 கிலோப் பிரிவு) - சிறந்த குத்துச் சண்டையாளர்
    - கர்நாடகாவின் அஞ்சு தேவி (50 கிலோப் பிரிவு) - போட்டியின் நம்பிக்கைக்குரிய வீரர்.




- 13 பேர் கொண்ட இந்திய அணியில் தமன்னா (48 கிலோப் பிரிவு), ப்ரீத்தி தஹியா (60 கிலோப் பிரிவு) H.அம்பேஷோரி தேவி (57 கிலோப் பிரிவு) ஆகியோர் தங்கப் பதக்கத்துடன் திரும்பிய இதர வீரர்கள் ஆவர்.
- இந்தியா, உக்ரைன், ஜெர்மனி, கஜகஸ்தான், லாத்வியா, ஹங்கேரி, லித்துவேனியா, மங்கோலியா, கிரீஸ் மற்றும் போலந்து உள்ளிட்ட 10 நாடுகள் இப்போட்டியில் பங்கேற்றன.

# முக்கிய தினங்கள்

## தேசிய மருத்துவர்கள் தினம் - ஜூலை 1

- தேசிய மருத்துவர்கள் தினமானது 1991 ஆம் ஆண்டு முதல் வருடந்தோறும் ஜூலை முதல் நாள் அனுசரிக்கப்படுகின்றது.




- இது மருத்துவர்களின் பாத்திரங்கள், முக்கியத்துவம் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றைக் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- மேலும் இது தாமே நெருங்கி வந்து தங்கள் பொறுப்புகளை அர்ப்பணிப்புடன் எடுத்துக் கொள்ள மருத்துவ நிபுணர்களை ஊக்குவிக்கின்றது.
- 2019 ஆம் ஆண்டின் மருத்துவர்கள் தின கருத்துருவானது "மருத்துவர்கள் மற்றும் மருத்துவ நிறுவனங்களுக்கு எதிரான வன்முறைகள் மீதான சகிப்பின்மை" என்பதாகும்.
- இந்தத் தினமானது, புகழ்பெற்ற மருத்துவரும் மேற்கு வங்காளத்தின் இரண்டாவது முதல்வருமான Dr. பிதன் சந்திர ராயைக் கௌரவிப்பதற்காக அனுசரிக்கப்படுகின்றது. இவரின் பிறந்த நாள் மற்றும் மறைந்த தினம் இரண்டும் இந்நாளுடன் ஒத்தமைகின்றது.

# இதரச் செய்திகள்

## அதிகச் செலவுடைய நகரங்கள் - மும்பை

- மும்பை நகரமானது இந்தியாவின் மிக அதிகச் செலவுடைய நகரமாகவும் ஆசியாவில் அதிகச் செலவுடைய முதல் 20 நகரங்களில் ஒன்றாகவும் உள்ளது.
- மும்பையில் உள்ள வீடுகளின் விலையானது உலகிலேயே மிக உயர்ந்ததாக உள்ளது.
- இந்தக் கணக்கெடுப்பானது மெர்சர் குழுமத்தால் வெளியிடப்பட்டது.
- புதுடெல்லி (118), சென்னை (154), பெங்களூரு (179) மற்றும் கொல்கத்தா (189) ஆகியவை இந்தப் பட்டியலில் உள்ள இதர இந்திய நகரங்களாகும்.
- தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக உலகின் அதிகச் செலவுடைய நகரமாக ஹாங்காங் நகரமும் அதனைத் தொடர்ந்து டோக்கியோ, சிங்கப்பூர் மற்றும் சியோல் ஆகிய நகரங்களும் உள்ளன.
- உலகின் மிகக் குறைந்தச் செலவுடைய நகரங்களாக துனிஸ் (209), தாஷ்கண்ட் (208), கராச்சி (207) ஆகியவை உள்ளன.

- - - - - - - - - - - - - - -